பரிசுத்த பவுல் ஆலயம் , குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

....பயப்படாதே, நான்
முந்தினவரும் பிந்தினவரும்,
உயிருள்ளவருமாயிருக்கிறேன்.

வெளி.1:17

செய்தி மலர்
மே 2011

மலர் 12
இதழ் 01



# செயலாளரிடமிருந்து

**பிதாவாகிய தேவனாலும், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.**

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே !

மரணத்தை ஜெயமாக வென்று உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்

கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் தம் நாம மகிமைக்கென்று நம்மை பாதுகாத்து நடத்தி வந்தபடியால் அவருக்கு நன்றி செலுத்துகிறேன். கடந்தமாத ஆராதனைகள், ஜெபகூடுகைகள், மற்றும் எல்லா ஊழியங்களிலும் தேவனுடைய பெலன் நம்மை நிரப்பியபடியால் அவருக்கு நன்றி செலுத்துவோம்.

பரிசுத்த வார ஆராதனைகளில் தேவ நாமம் மகிமைப்பட்டபடியால் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். குறிப்பாக பெரிய வெள்ளி ஆராதனையில் சிலுவை திருமொழிகளை பற்றி செய்தி அளிக்க நமது சபையின் விசுவாசிகளை கர்த்தர் விசேஷித்த ஞானத்தால் நிறைத்து வேத மறைபொருளை வெளிப்படுத்தினபடியால் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். தேவ நாம மகிமைக்கென்று செயற்குழுவிற்கு ஒத்தாசையாய் இருந்த உங்கள் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல்வைத்து,
என்னை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும்,
உயிருள்ளவருமாயிருக்கிறேன் (வெளி 1:17)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! இந்த வசனத்தை நாம் ஆழமாக சிந்திக்கும் போது தேவ பிரசன்னத்தை உணர்ந்து கொள்ள ஜெபத்தோடிருப்போம். சாதாரணமாக நாம் ஒரு காரியத்தை குறித்து பயந்து நடுங்கி கொண்டிருக்கிற நேரத்தில் நமக்கு அறிமுகமானவர்கள், மிகவும் நெருக்கமானவர்கள் தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு நம்மை தேற்றும் பொழுது நம் இருதயம் சற்று தேற்றபடுவதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

ஆனால் இந்த வசனத்தில் இயேசுவின் பிரசன்னத்தை உணர்ந்த யோவான் செத்தவனை போல அவர் பாதத்தில் விழுந்தான். அவனுடைய பெலன் அவனை விட்டு விலகி போனது போல உணர்ந்திருப்பான். அந்நேரத்தில் ஒரு வல்லமையான, தயவுள்ள கரம் தேற்றுகின்ற கரம் தன்னை தொடுவதை உணர்ந்து கண்ணேறிட்டு பார்கின்ற நேரத்தில் மகிமையான இயேசுவின் கண்கள் கனிவாக தன்னை நோக்கி பார்ப்பதை கண்டதுமன்றி அந்த கண்களையுடையவர் தன்னை பார்த்து பயப்படாதே என்று கூறும் போது அவன் எவ்வளவாக தேற்றப்பட்டிருப்பான்.

அன்பானவர்களே ஒவ்வொரு நாளும் பலவிதமான பயங்கள் நம்மை ஆட்கொள்கிறதாய் இருக்கிறது. பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" வெளி 21:8 என்று வேதம் சொல்லுகிறது. ஆனால் அந்த ஆக்கினைக்கு நம்மை விடுவிக்கும்படியாகதான் கர்த்தரின் வார்த்தை நம்மை தேற்றுகிறதாய் இருக்கிறது.

'பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன்.' (ஏசாயா 41:13)

இந்த வார்த்தை யாரிடமிருந்து வெளிப்பட்டது என்று பார்த்தால்,

"உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து" நாம் பயத்தினால் சோர்ந்து போய் இருக்கின்ற நேரத்தில் கர்த்தரின் கரம் நம்மை தேற்றி தூக்கி விடுகின்றதாய் இருக்கிறது.

அது மாத்திரமல்ல "உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய் உன்னோடே யுத்தம்பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் இல்பொருளாவார்கள்." (ஏசாயா 41:12) உன்னோடு வழக்காடுகிறவர்களோடு வழக்காடி, உன்னோடு யுத்தம் பண்ணுகிறவாகளோடு யுத்தம் பண்ணி அவர்களை அழிப்பார் என்று வசனம் நம்மை உணர்த்துகிறதாய் காணப்படுகிறது.

நாம் செய்ய வேண்டியது என்னவெனில் கர்த்தரிடத்தில் நாம் பாரங்களை தெரியபடுத்த வேண்டும்.

"சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன்." (ஏசாயா 41:17) எவ்வளவு மேலான வாக்குறுதி பாருங்கள். இஸ்ரவேலின் தேவன் எகிப்தின் அடிமைதனத்திலிருந்து ஜனங்களை வழிநடத்தி வந்த போது வெயில் நெருப்பாக கொளுத்துகின்ற வனாந்தரத்தில் குளிர்சாதன பெட்டியில் வைத்திருந்தது போல பனியினால் மூடி மன்னாவை கொடுத்தார். "சாயங்காலத்தில் காடைகள் வந்து விழுந்து பாளயத்தை மூடிக்கொண்டது. விடியற்காலத்தில் பாளயத்தைச் சுற்றி பனி பெய்திருந்தது. பெய்திருந்த பனி நீங்கினபின், இதோ, வனாந்தரத்தின் மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின் மேல் கிடந்தது"(யாத் 16:13,14).என்று வேத்தில் வாசிக்கின்றோம் ஆகவே நம்முடைய கற்பனைக்கு அப்பாற்பட்ட காரியங்களை நடப்பிக்க கர்த்தருக்கு முன்பாக நம்மை தாழ்த்தி ஒப்பு கொடுப்போம், கர்த்தர் பெரிய காரியங்களை நம்வாழ்க்கையில் செய்வார் என்பது அதிக நிச்சயம்.

ஆகவே அன்பானவர்களே கர்த்தரின் வார்த்தை "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென் நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்".(வெளி 1:18)ல் சொல்லுகிறது என்ற வார்த்தையை விசுவாசித்து, நம்முடைய தேவைகளைல்லாம் கர்த்தரிடம் அறிக்கையிட்டு அவருடைய இரக்கத்திற்காக காத்திருப்போம். "விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு,சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக". ஆமென். (எபேசியர் 3: 17- 21)

கர்த்தரின் பணியில்

அன்பு சகோதரன் : **ஜஸ்டின் சுந்தரராஜ்**

# தேவ செய்தி

## நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்: (யோசுவா 1:9)

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,**

**நாம் பல வேளைகளில் இந்த வசனத்தை சொல்லி ஒருவரையொருவர் தேற்றுவது உண்டு நல்லதுதான். ஆனால் அதன் அர்த்தத்தை சரியாய் புரிந்த கொண்டு நம்முடைய வாழ்க்கையிலே அப்பிசாயபடுத்தும் போது, அது நமக்கு நல்ல பலனை கொடுக்கும், நாம் எங்கு போனாலும், அவர் (தேவன்)நம்மோடு இருப்பார் என்று தவறான எண்ணம் நமக்கு ஏற்படாது.**

### எங்கே போகிறாய்:-

**தேவன் கொடுக்கும் கானான் தேசத்தக்கு நாம் போக வேண்டும் என்பதே ஆண்டவருடைய சித்தம். நாம் பூமியிலே செல்லும் பாதைகள் பலவாக இருக்கலாம், ஆனால் அவைகள் நம்மை எங்கே கொண்டு செல்கிறது என்பதில் நாம் தெளிவாக இருக்கவேண்டும். பசுமையான பரலோகமா? பட்சிக்கும் அக்கினியா? கர்த்தர் யோசுவாவை நோக்கி சொன்னார்:- நான் கொடுக்கும்(கானான்) தேசத்துக்குப் போங்கள்.(யோசுவா : 1:2) நாம் செல்லுகின்ற பாதை நல்லது போல தோன்றலாம். ஆனால் அது எங்கே முடிகிறது? மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு அதின் முடிவோ மரண வழிகள்.(நீதி மொழிகள் 16:25) வேனுக்கு சித்தமான பாதையில் நாம் நடக்கும் பொழுது நாம் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் நமக்கு கொடுப்பென் என்று அவர் சொல்லவில்லை, கொடுத்தேன் என்று சொல்லுகிறார்.**

### எப்படி அறிவது :-

**பாலைவனாக இருந்தாலும் சரி, காடாக இருந்தாலும் சரி, திசைகாட்டும் உபகரணங்கள் மற்றும் வரைபடங்கள் கொண்டு, நாம் போகும் பாதை சரியா, தவறா என்று சுலபமாய் அறிய முடியும் அது போல நாம் நடக்கும் பாதைகள் ,எடுக்கும் முடிவுகள், சிந்திக்கும் சிந்தனைகள், நம்மை பரம கானானுக்கு நேராய் கொண்டு செல்கிறதா? இல்லையா? எப்படி அறிவது? அறிந்து கொள்ள பெரும் உதவியாய் இருக்கும் உபகரணம்தான் ' வேத பத்தகம்' கர்த்தருடைய வார்த்தயைின்படியெல்லாம் செய்ய நாம் கவனமாயிருக்க வேண்டும். அதை விட்டு வலதுபறமும் இடது புறமும் விலகாதிருக்க வேண்டும். இரவும் பகலும் அதை தியானித்து கொண்டிருக்கவேண்டும். அப்பொழுது புத்தி மானாய் நடந்து கொள்வோம். நம் பாதை பரம கானானுக்குதான் செல்லுகிறது என்கிற நிச்சயம் நமக்கு வரும் ' என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கமாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு. நீ போகும்**

இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக. இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்( யோசுவா 1:7,8)

பலங்கொண்ட திடமனதாயிரு:-

பிசாசு இயேசுவை சோதிக்க கல்லை அப்பமாக மாற்ற சொன்னான். இந்த உலகம் அற்பமான அற்புதங்களை எதிர்பார்க்கும் உலகம். இயேசு கல்லை அப்பமாக அல்ல, கல்லான இருதயத்தை சுவையான அப்பமாக மாற்றவே வந்தார். பிசாசானவன் கல்லை காண்பித்து நம்மை விழுங்க பார்கிறான். கர்த்தர் யோசுவாவுக்கு இப்படியாக கட்டளையிட்டார், பலங்கொண்டு திடமனதாயிரு திகையாதே, கலங்காதே, (யோசுவா 1:9)

ஸ்தேவானுடைய கண்கள் சீறி வரும் கற்களை அல்ல., மகிமை நிறைந்த தேவனை கண்டது. நம்முடைய விசுவாச வாழ்க்கைகயில் முன்னேறும் போது சத்துருவானவன் பலவிதமான தடைகற்களை கொண்டு நம்மை வீழ்த்த முயற்ச்சி செய்வான். ஒரு வேளை தடுக்கி கீழே விழ நேர்ந்தாலும் மகனே ! மகளே ! திகையாதே கலங்காதே கர்த்தருடைய வசனத்தின் படி செய்ய கவனாயிருக்க மாத்திரம் மிகவும் பெலன் கொண்டு திடமனதாயிரு, அந்த வார்த்தைகள் உன் வாயை விட்டு பிரியாதிருப்பதாக. கர்த்தருடைய வார்த்தைகளை பாடலாய் பாடி அவரை துதி!. நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.(யோசுவா 1:5) என்று சொன்ன தேவன் வாக்கு மாறாத தேவனாய் இருக்கிறார்.

நீ போகு இடமெல்லாம் உன்னோடு வருவேன்

திகையாதே கலங்காதே

நீர் என் தாசன்! நான் உன்னை தெரிந்து கொண்டேன்.

அன்பான சகோதரியே ,சகோதரனே, கர்த்தருக்கு பிரியமாக இருந்து கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து நடக்கும் பட்சத்தில், தேவன் நமக்கு தரும் வாக்குத்தத்தம் இதுதான். பிரியமாக நடந்து கீழ்படிவோம் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக் கொள்வோம். கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

**கிறிஸ்டோபர் தேவராஜ்**

# KIDS CORNER

## MONTH OF May 2011

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | | 6 | 7 | 8 | 9 |
| | 10 | | | | | | 11 | | | |
| | 12 | | | | | | 13 | | | |
| 14 | | | | 15 | | 16 | | | | |
| 17 | | | 18 | | 19 | | | | | |
| 20 | | | | 21 | | 22 | | 23 | 24 | 25 |
| | | | 26 | | 27 | | 28 | | | |
| 29 | 30 | 31 | | | | 32 | | 33 | | |
| 34 | | | | | 35 | | 36 | | | |
| 37 | | | | | 38 | | | | | |
| 39 | | | | | 40 | | | | | |

### Across

**1. Man was madin God's(1 Cor 11:7) 6. Be. omen**

## Month of April 2011
## Answer

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| P | A | P | A | | C | H | A | S | M | S |
| A | L | U | M | | P | I | S | T | O | N |
| P | A | R | E | | U | N | T | R | U | E |
| A | M | E | N | | | | E | A | S | E |
| L | O | R | D | S | P | R | A | Y | E | R |
| | | | | T | E | A | | | | |
| L | O | R | D | S | P | R | A | Y | E | R |
| A | V | E | R | | | | M | A | R | E |
| M | E | T | A | L | S | | A | C | R | E |
| P | R | I | M | A | L | | S | H | E | D |
| S | T | E | A | D | Y | | S | T | D | S |

# ஊழியர்கள் பகுதி

என்னுடைய சிங்காசனத்தில் என்னோடு உட்காரும்படி செய்வேன்,என்று தன்னுடையதெல்லாம் நமக்கு கொடுக்கிற Selfless தேவனாய் இயேசு இருக்கிறா,அதனால்தான் அவர் பெரியவரா போற்றப்படுகிறார். அவரை போல தேவ மனுஷர்காளாய் நாம் சுயநலமற்றவராய் நம்மை விளங்க பண்ண வேண்டும். மற்றும்தேவ மனுஷனுடைய வாயிலிருந்து பறப்படுகிற சொற்கள் தப்பாமல் நிறைவேறும். தப்பிதமாய் நிறைவேறினால் அவன் தேவனிடத்தில் இருந்து பெற்றுக் கொள்ளவில்லை

யாத் 11:3... மோசே என்பவன் எகிப்து தேசத்தில் பார்வோன் ஊழியக்காரரின் பார்வைக்கும், ஜனங்களின் பார்வைக்கும் மிகவும் பொரியவனாய் இருந்தான் என்று தேவ மனுஷனை குறித்து சொல்லப்பட்டுள்ளது. 14:31ல் அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்கு பயந்து கத்தரிடத்திலும் அவரது ஊழியக்காரனாகிய மோசேயினடத்திலும் விசுவாசம் வைத்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

தனக்கு விரோதமாக கோராகு முதலானோர் எழுமம்பியபோது மோசே ‘ சகல மனிதர்களுக்கு நேரிடுவது போல அவர்களுக்கும் நேரிட்டால் கர்த்தர் என்னை அனுப்பவில்லை, பூமி தன் வாயை திறந்து இவர்களை விழுங்கி போட்டதேயானால் இந்த மனிதர் கர்த்தரை அவமதித்தார்கள் என்று அறிவீர்கள் என்று சொல்லும்போதே பூமி பிளந்து கோராகு முதலானோர் அவர்களுக்குண்டான யாவையும் விழுங்கி போட்டது’ தேவ மனுஷன் சொன்னது யாவும் தப்பாமல் நிறைவேறிற்று. தேவ மனுஷர்களே, உங்கள் வாயிலிருந்து புற்ப்படும் வார்த்தைகள் தப்பாமல் நிறைவேறும்படியாக இருக்க வேண்டும்.

**3. தேவ மனுஷன் கர்த்தருடைய வார்த்தையை பெற்றுக் கொள்கிறான்:**

தேவனுடைய மனுஷனாகிய செமாயாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி 2 நாளாகமம் 11:2 .... தேவ னுடைய மனுஷர்களுக்கு கர்த்தருடைய வார்த்தை கிடைக்க வேண்டும் .

ஞாயிற்று ஆராதனையில் பிரசங்கம் பண்ணுவதற்கு ஒரு வாரத்திற்காவது பிரசவ வேதனை படவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கு காத்திருக்க வேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இருந்த நாட்களில் அன்னாவும், காய்பாவும் பிரதான ஆசாரியர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு தேவனுடைய வார்த்தை உண்டாக வில்லை. ஆனால் வனாந்தரத்தில் வாழ்க்கை நடத்தி கொண்டிருந்த யோவான் ஸ்நானனுக்கு தேவனுடைய வார்த்தை உண்டாயிற்று (லூக்கா 3:2) "டயபெ பண்ணி பிரசங்கம் பண்ணி யாரை பிரசங்கத்தில் வறுத்தெடுக்கலாம் என்று பிரசங்கம் பண்ணுவதை விட தேவனுடைய வார்த்தையபை பெற்றுக் கொண்டு பேசுவது அநேகரை போஷக்கதக்க வல்லமை உடையதாயிருக்கும்.

அடுத்து வரும் இதழில் வேனுடைய மனுஷன் எப்படி உருவாக்கப்படுகிறான் என்பதை குறித்து பார்ப்போம், அதாவது ஆயத்தப்பபடுத்த படுகிறான் என்பதை குறித்து பார்ப்போம்.

(இன்னும் தொடரும்)

(நன்றி இயேசு ஜீவிக்கிறார் ஊழியம்)

# 2011 ஏப்ரல் மாத வேத வினாவிற்கான பதில்கள். 

1. அப்சலோம் II சாமு 14:25
2. பத்சேபாள் II சாமு 11:2,3
3. அப்சலோம் II சாமு 15:5,6
4. தாவீதிடம் மேவி போசேத் II சாமு 19:25,26
5. யோனதாப் II சாமு 11:3
6. அப்சலோம் II சாமு 18:14,15
7. அகித்தோப்பேல் II சாமு 17:23
8. பர்சிலா II சாமு 19:37
9. தாவிது II சாமு 12:20
10. பெனாயா II சாமு 23:21
11. அப்னேர் II சாமு 3:8
12. பெனாயா II சாமு 23:20
13. தாவீது II சாமு 1:13
14. பெனாயா II சாமு 23:20
15. தாமார் II சாமு 13:1

## 2011 மார்ச் மாத வேத வினாவிற்கு விடை எழுதியவர்கள்

சகோதரி. லதா கிறிஸ்டோபர்
சகோதரி. சுகந்தி தம்புகுமார்
சகோதரி. எஸ்தர் விசு
சகோதரி. மரகதம் ஸ்டீஃபன்
சகோதரி. குமுதினி வில்ஸன்
சகோதரி. ஜுனா சதீஷ்குமார்
சகோதரி. சாந்தி சீனிவாசன்
சகோதரர். பாபு
சகோதரர். டேவிட் செலின்
சகோதரர். ராஜாசிங்
சகோதரர். எட்வின் சாம் ஞானதுரை
சகோதரி. மெர்லின் அஜீத்
சகோதரி. பிங்கி சாம்
சகோதரி. ஹேனா எசேக்கியல்
சகோதரி. அனுஷுயா டேவிட்சன்
சகோதரி. பத்மா ராயன்
சகோதரி. மரியா ஆஸ்டின்
சகோதரி. சித்ரா ஞான சுரேஷ்
சகோதரர். ஜான்ஸன்
சகோதரர். ஆரோக்கியராஜ்
சகோதரர். ரெமி ஜார்ஜ்

# 2011 மே மாத வேத வினா பகுதி

1. வெகு அழகாய் இருந்த ஒரு பெண் யார்?

2. மிகவும் அழகாய் இருந்தவன் யார்?

3. தன் முகம் தன் முழங்காலில் பட குனிந்து ஜெபித்த தீர்க்கதரிசி யார்?

4. நான் சிறு வயது முதல் கர்த்தருக்கு பயந்து நடக்கிறவன் என்று சொன்னது யார்?

5. சுரமண்டலகாரன் வந்து வாசித்தபோது கர்த்தருடைய கரம் அவன் மேல் இறங்கி, தீர்க்கதரிசனம் உறைத்தவன் யார்?

6. பதினாலு நாட்கள் பண்டிகை நடத்திய ராஜா யார்?

7. மரித்தவனால் மரித்தவன் உயிர் பெற்றது எங்கே?

8. சாகப் பயந்து அழுத அரசன் யார்?

9. சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து நான் சாகவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்த தீர்க்கதரிசி யார்?

10. நாயாகிய உமது அடியான் என்றவன் யார்?

11. பராக்கிரசாலியும், படைத்தலைவனுமாயிருந்த குஷ்டரோகி யார்?

12. துரோகம் துரோகம் என்று கூவினவன் யார்?

13. நான் ஒருவன் மாத்திரம் மீதி இருக்கிறேன் என்றது யார்?

14. கப்பல்களைச் செய்த ஒரு ராஜா யார்?

15. பலிபீடங்களுக்கு முன்பாக கொன்று போடப்பட்ட பூசாரி யார்?

விடைகளை வருகின்ற 22-5-2011 க்குள் சபையின் செயலாளரிடம் நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை 1 இராஜாக்கள், 2 இராஜாக்கள் புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.ஆரோக்கியதாஸ் அவர்களிடத்திலும். திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. தாமஸ் அவர்களிடத்திலும், போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. ஸ்டீ:பன் அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் (சகோ. ஆரோக்கியதாஸ் 99870126) (சகோ.தாமஸ் 66810423) (சகோ. ஸ்டீ:பன் 65868048)

 "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக". ரோ 16:20

## இந்த மாதம் பிறந்த நாளைக் சிறப்பிக்கிறவர்கள்

**செல்வன் : டினோ ஷிபு 6.:5** **செல்வன் : ஜோ நிர்மல் சிங் 6.:5**
**செல்வன் : அசரீயா பிரவீண் குமார் 6.:5** **செல்வன் : மில்டன் கிஷோர்குமார்**
**செல்வன் : கதிரவன் சுகுமாரன் 31.:5**

**செல்வி : ஹெலன் பிராத்னா 4.:5** **செல்வி : அன்னாள் ஆசீர்வாதம் 6.:5**
**செல்வி : ஏஞ்சலின் பிரிசில்லா 6.:5** **செல்வி : சித்ரா ராஜன் 8.:5**
**செல்வி : ரீமா ரோஸ் எபிநேசர் 16.:5** **செல்வி : இவாஞ்சலின் ஷாஜன் 17.:5**
**செல்வி : மீனா குமாரி சுகுமாரன் 22.:5** **செல்வி : சவுரியம்மாள் 29.:5**

**சகோதரி : மரியா குளோரி 2.:5** **சகோதரி : சித்ரா மேரி 2.:5**
**சகோதரி : எலிசபெத் ஸ்டாலின் 6.:5** **சகோதரி : ஜெய லஷ்மி கொமையன் 9.:5**
**சகோதரி : பரிமளா ராஜேந்திரன் 10.:5** **சகோதரி : குமுதினி வில்சன் 22.:5**
**சகோதரி : மெடில்டா ராணி 22.:5** **சகோதரி : சுகந்தி தம்பு குமார் 29.:5**
**சகோதரி : குளோரி நவோமி ஆல்பஸ் ஜேம்ஸ் 30.:5**

**சகோ : சஜின் ஜீவா 3.:5** **சகோ : ஜெப கிங்ஸ்லி 3.:5**
**சகோ : ஜோன்ஸ செல்வா சிங் 6.:5** **சகோ : ீ. கொம்மையன் 9.:5**
**சகோ : ஜஸ்டின் சுந்தரராஜ் 10.:5** **சகோ : ராஜேந்திரன் 10.:5**
**சகோ : எபநேசர் 10.:5** **சகோ : ரிச்சர்ட் சாலமன் 11.:5**
**சகோ : கலிய மூர்த்தி 14.:5** **சகோ : ஜான் ராஜ் 14.:5**
**சகோ : யு.ஆ சஜின் ராஜன் 14.:5** **சகோ : பால்ராஜ் ஆமோஸ் 15.:5**
**சகோ : வு. சைமன் 16.:5** **சகோ : ஜோஸ்வா 19.:5**
**சகோ : பன்னீர் செல்வம் 20.:5** **சகோ : வு. ஸ்டீ.:பன் 20.:5**
**சகோ : ராஜவேல் 21.:5** **சகோ : லாரன்ஸ் 26.:5**
**சகோ : ஆசீர்வாதம் 29.:5** **சகோ பாக்கியராஜ் 30.:5**

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" .ஆதி 12:2

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

**திருமதி – திரு : சஜின் ராஜன் 4.:5** **திருமதி – திரு : SS பாண்டியன் 5.:5**
**திருமதி – திரு : எபிநேசர் 5.:5** **திருமதி – திரு : ஸ்டாலின் 6.:5**
**திருமதி – திரு : M வில்ஸன் 6.:5** **திருமதி – திரு : ஜெரேமியா பிரதிப் குமார்**
**திருமதி – திரு : கிருஷ்ண குமார் 10.:5** **திருமதி – திரு : அந்தோனி சாமி 11.:5**
**திருமதி – திரு : F தாமஸ் 15.:5** **திருமதி – திரு : கொம்மையன் 16.:5**
**திருமதி – திரு : ஆல்பிஸ் ஜேம்ஸ் 16.:5** **திருமதி – திரு : ஜான் மில்லர் 18.:5**
**திருமதி –திரு : ஈஸ்டர் ராஜ் 18.:5** **திருமதி – திரு : பிரேம் குமார் 23.:5**
**திருமதி – திரு : பால் பாண்டியராஜ்24.:5** **திருமதி – திரு : ஜெயசேகர் 25.:5**
**திருமதி – திரு : சாம் தேவநேசன் 30.:5**

# 2011 மே மாத ஆலய ஆராதனை

**வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4 -10 முதல் 5-45 வரை**

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 6-05-2011 | சிற்றுலா (Picnic) | |
| 13-05-2011 | சுவிசேஷகர், ராபின்ஸன் (இந்தியா) | |
| 20-05-2011 | உபவாச ஆராதனை | போதகர். ஜான் பாஸ்கரன் (இந்தியா) |
| 27-05-2011 | தாய்மார்கள் தின ஆராதனை | போதகர் . சாமுவேல் (இந்தியா) |

**ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5-00 முதல் 6-15 வரை**

| நாள் | செய்தி |
|---|---|
| 1-04-2011 | சகோ. ரவிச்சந்திரன் |
| 8-04-2011 | சகோ. ஐசக் துரை |
| 15-04-2011 | சகோ. ஜெயசேகர் |
| 22-04-2011 | போதகர். ஜான் பாஸ்கரன் (இந்தியா) |
| 29-04-2011 | போதகர் . சாமுவேல் (இந்தியா) |

**சகோதரிகள் ஐக்கிய கூடுகை - நாள் 25-5-2011 நேரம் : மாலை 6:30 மணிக்கு**
**இடம் : சகோதரி. மெர்லின் ஜோன்ஸ் அவர்கள் இல்லம் (பாஹாஹீல்)**

20-05-2011 ஆம் தேதி
**மாலை 6.30மணி அளவில் பொதுமன்றம்**
**இடம் : சபையின் ஜெப வீடு பாஹாஹீல்**

**முழு இரவு ஜெபம் -12-5-2011**
**(இடம்) பரிசுத்த பவுல் ஆலயம், இரவு 11-00 மணி முதல்**
**அதிகாலை 3 -00 மணி வரை, சிறப்பு செய்தி போதகர் - ஜான் பாஸ்கரன்**

**வாலிபர்கள் ஐக்கிய கூடுகை - நாள் 27-5-2011 நேரம் : மாலை 6:30 மணிக்கு**
**இடம் : சபையின் ஜெப வீடு பாஹாஹீல்**

# குடும்ப பகுதி

## இயேசுவை மையமாகக் கொண்ட குடும்பம்

பகையோடிருக்கும் கொழுத்த எருதின் கறியை பார்கிலும் சிநேகத்தோடுடிருக்கும் இலைக்கறியே நல்லது(நிதி 15:17)சண்டைகாரியும், கோபக்காரியுமான ஸ்திரியுடன் குடியிருப்பதை பார்கிலும், வனாந்தரத்தில் குடியிருப்பதே நலம். (நீதி 21:19). சண்டைகாரியொட ஒரு பெரிய விட்டிலெ குடியிருப்பதை பார்கிலும், விட்டில் ஒர மூலையில் தங்கி இருப்பதே நலம். (நீதி 21:9)அடைமழை நாளில் ஓயாத ஒழுக்கும், சண்டைகாரியான ஸ்திரியும் சரி,அவளை அடக்கப்பார்க்கிறவன் காற்றை அடக்கி, தன் வலது கையினால் எண்ணையை பிடித்து பார்கிறான் (நீதி 27:15,16)

நீங்கள் விரும்பினால், தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட விடு உங்களுக்கு அமையும, குடும்பத்தார் அனைவரும் சந்தோஷிப்பார்கள், அல்லது உங்கள் நாவினால் அந்த விட்டை நாசமாகவும் மாற்றலாம், உங்களுக்கு உங்கள் வீடு முக்கியமானதால் ஒரு வசனத்தை கூட நீங்கள் ஞாபகத்தில் கொள்ள வேண்டும் 'வீடு ஞானத்தினாலே கட்டப்பட்டு விவேகத்தினாலே நிலை நிறுத்தப்படும்' (நீதி 24:3) அந்த கடினமான காலத்தில் ஒரு தாயாகவும்,மனைவியாக இருப்பது மிக சிரமம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உதவியில்லாமல் நிச்சயமாக உங்கள் பொறுப்புக்களை நிறைவேற்ற முடியாது. உங்கள் வாழ்க்கயை கர்த்தருக்கு ஒப்பு கொடுத்து, ஒரு நல்ல தாயாய், ஒரு நல்ல மனைவியாய் இருக்க கர்த்தர் உதவி செய்வாராக, ஏனெனில் கர்த்தருக்கு ஒப்பு கொடுத்த நல்ல மனைவி உங்கள் கணவனுக்கு தேவை, ஒரு நல்ல கிறிஸ்தவ தாய் உங்கள் பிள்ளகைளுக்கு தேவை.

நான் என் தாயை நினைக்கும் பொழுது ஒரு அருமையான கிறிஸ்தவ அம்மாவை காண்கிறேன், அவர்கள் எவ்வளவாய் கர்த்தரை விசுவாசித்தார்கள், என காண்கிறேன் என்று நம்முடைய பிள்ளைகள் சாட்சி சொல்லும் வண்ணமாக நாம் இருக்கிறோமா, அல்லது நமது நடவடிக்ககைளால் ஏசுவை ஏற்றுக் கொண்டவர்கள் இப்படிதான் இருப்பார்களா? என்று ஆண்டவரை விட்டு விலகி போக நாம் வகை தேடி கொடுக்கிற தாயாக நாம் இருக்கிறோமா. நாம்தான் நம் பிள்ளைகளின் கண்ணாடி, நாம் எப்படி நடக்கிறோமோ அப்படிதான் அவர்களும் நடப்பார்கள், நாம் எப்படி பேசுகிறோமோ அப்படித்தான் அவர்களும் பேசுவார்கள். நமது செய்கைகளையும் அவர்கள் கவனிப்பார்கள். எனக்கன்பான சகோதரிகளே நம் பிள்ளைகள் முன்பாக நாம் எப்படி நடந்து கொள்கிறோம்?

என் தாய் ஆராதனையில் ஒழுங்காக பங்கெடுக்கிற தாய், பரிசுத்தமுள்ள வாழ்க்கயை தனக்கென்று ஏற்படுத்தி கொண்டு வாழ்கிற தாய், அப்பாவை கனம் பண்ணும் தாய். அப்பாவின் சொல்லுக்கு கீழ்படிந்து நடக்கிற தாய், விதண்டாவாதம் ஏதும் பேசாமல் ஒற்றுமையாய் குடும்பத்தை நடத்துகிற தாய் என்றும், மொத்தத்தில் என் தாய் இயேசுவை போன்ற தாய் என்று

நினைப்பார்களா? உங்களில் அவர்கள் இயெசுவை காண்பார்களா? ஒரு சகோதரி ஒரு ஊழியக்காரருக்கு இப்படியாக கடிதம் எழுதியிருந்தார்கள். நான் என் புருஷனையும், என் பிள்ளையையும் குறித்து எப்பொழுதும் குறை பட்டு கொண்டிருந்தேன். என் வீட்டில் சந்தோஷம் இல்லை, ஏன் திருமணம் செய்து கொண்டேன் என்று எண்ணினேன், அந்த நிலையில் உங்கள் கூட்டத்திற்குவந்து நான் எவ்வளவு சுயநலக்காரி என்று அறிந்தேன், இம்மட்டும் நான் மற்றவர்கள் என்னை சந்தோஷப்படுத்த வேண்டும் என்று எண்ணியிருந்தேன். இப்பொழுது இயேசு என்னை மாற்றினார், அவர்களை நான் சந்தோஷப்படுத்த விரும்புகிறேன். அவர்களும் என்னை சந்தோஷப்படுத்த தொடங்கி விட்டார்கள். என் குடும்பத்தின் தோல்விக்கு நானே காரணம் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

ஒரு வீட்டை நரகமாவோ, அல்லது மோட்சமாகவோ மாற்றும் பொறுப்பு ஸ்திரியுனுடையது. தங்கள் கணவன்மார்கள், குடிகாரர்களாகவும், துரோகிகளாகவும் இருந்த போதிலும் கூட தன் பிள்ளைகளுக்கு தன் வீட்டை பரலோகமாக ஆக்கியிருக்கும் தாய்மாரை நான் அறிவேன், நீங்கள் வீட்டை கட்டும் குணசாலியான ஸ்திரியா?

**புருஷர்களே:-**

'அந்தப்படியே புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்'. ( 1 பேதுரு 3:7)

இன்றைய நாகரீகம் எக்காலமும் இல்லாத சுயாதீனத்தை பெண்களுக்கு வழங்கியிருக்கிறது. ஆயினும் சில இடங்களில் மனைவிகள் மந்தைகளாகவே மதிக்கப்படுகின்றனர். மனிதன் ஸ்திரியை மதித்தாலும், மதிக்காவிட்டாலும் தேவனுடைய ஒழுங்கு மாறாதிருக்கிறது, புருஷர்களை தேவன் குடும்பத்தில் தலைவர்களாக நியமித்திருக்கிறார், சகோதரனே தேவன் உன்னை குடும்பத்தின் தலைவராக நியமித்திருக்கிறார், தலைவன் என்ற பொறுப்பை நீ நிறைவேற்றாவிட்டால், நீ ஒரு கிறிஸ்தவனாக இருக்கவில்லை. ஒரு ஸ்திரி இந்த ஒழுங்கை எதிர்த்தால் அவள் தேவனுடைய சித்தத்திற்கு எதிர்த்து நிற்கிறாள். ஏனெனில் 'கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்'. (எபேசியர் 5:23) நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான். (யோசுவா 24:15)புருஷன் வீட்டிலே தேவனுடைய பிரதிநிதி என்று வேதம் போதிக்கிறது, ஒரு புருஷன் என்ற முறையில் குடும்பத்தின் தலைவராயிருப்பது மிக பயங்கரமான பொறுப்பு..... ( இன்னும்

# நீங்களும் உங்கள் Teen Age மகனும்

பிரியமான சகோதர சகோதரிகளே உங்களுடைய Teen Age மகனுடன் நீங்கள் எப்படி சில நேரங்களில் முடிவு எடுப்பீர்கள் என்பதை குறித்து சின்ன பரீட்சையின் முடிவுகள்

## நீங்கள் பெற்ற மதிப்பெண்கள்

| | | | |
|---|---|---|---|
| கேள்வி எண் 1. | **A - 10 .** | B - 5 . | C - 0 |
| கேள்வி எண் 2 . | **A - 0** | B - 5 . | C - 10 |
| கேள்வி எண் 3. | **A - 0 .** | B - 5 . | C - 10 |
| கேள்வி எண் 4. | **A - 10 .** | B - 5 . | C - 0 |
| கேள்வி எண் 5. | **A - 10 .** | B - 0 . | C - 5 |
| கேள்வி எண் 6. | **A - 5 .** | B - 10 . | C - 0 |
| கேள்வி எண் 7. | **A - 0 .** | B - 10 . | C - 5 |
| கேள்வி எண் 8. | **A - 0 .** | B - 5 . | C - 10 |
| கேள்வி எண் 9. | **A - 10 .** | B - 5 . | C - 0 |
| கேள்வி எண் 10. | **A - 10 .** | B - 5 . | C - 0 |

நீங்கள் 75 முதல் 100 மதிப்பபெண்கள் பெற்றிருந்தால். உங்களுக்கு வாழ்த்துக்கள். தேவன உங்களுக்கு நல்ல கனிகளை தந்திருக்கிறார். அவர்களை பாதுகாத்த நல்வழிபடுத்தும் முறைகளையும் உங்களுக்கு கற்று தந்திரக்கிறார். இதற்காக நிங்கள் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள்.

நீங்கள் 50 முதல் 70 மதிப்பபெண் பெற்றிருந்தால்... ஆண்டவர் உங்களுக்கு நல்ல ஈவினை தந்திருக்கிறார் உங்கள பிள்ளைகள் மீது கொண்டுள்ள கோபத்தை குறையுங்கள், இன்னும் அதிக அன்பு செலுத்துங்கள். உங்கள் பிள்ளைகளின் பிரச்சனைகளை நீங்களே நேரடியாக பரிவுடன் கவனியுங்கள்.

நீங்கள் 50க்கும் குறைவான மதிப்பெண்களை பெற்றிருக்கிறீர்களா? இன்றே இதனை உணர்த்தியதற்காக ஸ்தோத்திரம் செலுத்தி ஆண்டவரிடம் ஜெபியுங்கள், கோபத்தை குறையுங்கள். இன்று முதல் குடம்ப ஜெபம் செய்வோம் என்று கண்டிப்பாய் தீர்மாணியுங்கள். தொடர்ந்து கடை பிடியுங்கள் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுங்கள். உங்கள் பிள்ளைகள் பந்தியை சுற்றிலும் ஒலிவமர கன்று களை போல இருப்பார்கள்.

# வாலிபர் பகுதி

**கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப சகோதர சகோதரிகளே இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள் இந்த செய்தி மலர் மூலம் மீண்டும் உங்களை சந்திப்பதில் கர்த்தருக்குள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.**

**(சென்ற இதழின் தொடர்ச்சி)**

## கர்த்தர் கூட இருக்கிறார்

• uøµ° ÷» £õø¯ Â›zx _Áº Kµ©õP £kzv ¸¢÷uß. J ¸ ö£›¯P ¸¢÷uÒ A¢u_ÁØÔÀ÷©¼ ¸¢x CÓ[QU öPõ s i ¸¢ux. CßÝ®]»{ ªh[PÎÀ Ax Gß £kUøPUSÒuõß Á¢v ¸UP÷Á s k®. C¨£i J ¸ B£zx Á ¸ Áx GÚUSz öu›¯ÂÀø». BÚõÀ Pºzuº Aøu¨ £õºzuõº.

Eh÷Ú Gß øÚ A¢uz w[SUS Â»UQ¨ £õxPõUP u® yuøÚ AÝ¨¤ Gß øÚ GÊ¨¤Úõº. C÷uõ, C ì µ÷Áø»U &÷uÁ¨ ¤Òø ÎPÒ& PõUQÓÁº EÓ[SÁxªÀø» y[SQÓxªÀø». Pºzuº Eß øÚU PõUQÓÁº; Pºzuº Eß Á»x £UPzv÷» EÚUS {Ç»õ° ¸UQÓõº. (\[.121:4,5) GßÓ ÷Áu Á\Ú[PÒ GzuøÚ E s ø©²Ò Í x! AÁº |®ø© C¢u E»Pzvß w[SUS Â»UQUPõ¨£Áº ©mk©À», |® Bzx©õøÁ²® AÁº Põ¨£õº. AuØPõP ÷¯÷PõÁõ å®©õ ÁõP Th C ¸UQÓõº. • iÄ £›¯¢u • ® AÁº Põ¨£õº.

Gß FÈ¯zvß Bµ®£ |õmP ÎÀ |õß G[S FÈ¯zvØSa ö\ßÓõ¾®, ¤µ\[P® • i¢ux®¯õµõÁx J ¸ Áº Á¢x, C¢u Áõ¼£ Á¯vÀ |ßÓõP FÈ¯® ö\´QÕºPÒ, BÚõÀ Pøh] Áøµ {ø»{ØP ÷Á s k÷©! GßÖ ö\õÀ¼¨ ÷£õÁõºPÒ. C¢u Áõºzøuø¯ ÷PmkU ÷Pmk, A¨£i¯õÚõÀ GßÚõÀ Pøh] Áøµ B shÁ ¸USÒ FÈ¯zvÀ {ø»{ØP • i¯õuõ? GßÓ ÷PÒÂ Gß EÒÍzvÀ GÊ®£ Bµ®¤zux.

C¨£i¨£mh \©¯zvÀuõß J ¸ \©¯®, FÈ¯zøu • izx CµÂÀ £ì {ø»¯zvØS Á¢x ÷\º¢÷uõ®. ©Ö£i²® AvPõø» _©õº 6 © o USzuõß A[Q ¸¢x £ì C ¸¢ux. |õ[PÒ SÊÁõP £ì éúUPõP Põzv ¸¢÷uõ®. A¢u \©¯zvÀ |õß CxÁøµ \¢vzvµõu J ¸ ©Ûuº ÷|µi¯õP GßÛhzvÀ Á¢x ÷£\ Bµ®¤zuõº. FÈ¯U Põ›¯[Pø ÍU SÔzx Gß÷Úõk £» Põ›¯[Pø Í¨ ÷£]Úõº. AÁº ÷£_ÁøuU ÷Pm£÷u GÚUSa \¢÷uõ å©õ° ¸¢ux.

AuØSÒ |õ[PÒ ¤µ¯õ n¨£h ÷Á s i¯ £ì ¦Ó¨£mk Âmhx. A¨ö£õÊx A¢u ©Ûuº Gß ÷uõÒ «x øP øÁzx, GßøÚ¨ £õºzx: u®¤, C¢u Áõ¼£ |õmP ÎÀ Pºzuº E[Pø Í FÈ¯zØPõPz öu›¢x öPõ s hõº! ÷¯õ÷\¨ ø£UPõzxU öPõ s h Pºzuº, E[Pø Í²®PõzxU öPõÒÁõº! GßÖ ö\õÀ¼Âmk Ph¢x ÷£õ´ Âmhõº.

|õß £ì êÀHÔ ¤µ¯õ n¨£mkU öPõ s i ¸¢÷£õx, A¢u Áõºzøu

v ¸®£z v ¸®£ Gß EÒÍzvÀ öuõÛzxU öPõ s ÷h ° ¸¢ux. AÁº ¯õº? Hß Gß Ûh®©mk® AÁº ÷£\ ÷Á s k®? C¢u Áõºzøuø¯ AÁº ö\õÀ»U Põµ n ö©ßÚ? GßÖ ÷¯õ]UP Bµ®¤z÷uß. Gß÷Úõk ÷£]Ú A¢u ©Ûuøµ AuØS • ß¦®, AuØS¨ ¤ß¦® CxÁøµ |õß £õºzuvÀø». Pºzu÷µ GßøÚ A ßÖ \¢vzx Gß÷Úõk ÷£]Úõº GßÖ Â_Áõ]UQ÷Óß.

÷¯õ÷\¨ø£U Põz xU öPõ s h Pºzuº E[Pø Í ²® Põz xU öPõÒÁõº GßÓ Áõºzøu GÚUSÒ BÇ©õ´ £v¢x Âmhx. GÚUSÒ ö£›¯ Â_Áõ\zøuU öPõ s k Á¢ux. GßøÚ ²® Pºzuº Pøh]Áøµ Põz xU öPõÒÁõº’ GßÓ Â_Áõ\® GÚUSÒ E s hõÚx.A¢u |õ Î ¼ ¸ ¢x, |õß öá¤US® ÷£õöuÀ»õ®, ÷¯õ÷\¨ø£U Põz xU öPõ s h Pºzuº GßøÚ ²® Põz xU öPõÒÃº GßÖ A¡UP¡ ö\õÀ¼ öá¤¨÷£ß. Ph¢u 30 Á ¸ h[P Í õP Pºzuº Q ¸ ø£¯õP GßøÚU Põz x Á ¸ QÓõº. Pøh]Áøµ AÁº GßøÚU Põz xU öPõÒÁõº GßÖ AÔ¢v ¸ UQ÷Óß. Pºzuº EßøÚ GÀ»õz w[ SUS® Â »UQU Põ¨£õº; AÁº Eß B z x©õøÁU Põ¨£õº. Pºzuº Eß ÷£õUøP ²® Eß Áµzøu ²® Cx • uØöPõ s k Gß öÓßøÓUS® Põ¨£õº. (\[. 121:7,8) GßÖ ÁõUSU öPõkzu÷uÁß,uß ÁõUSzuzuzvÀ E s ø©²ÒÍ Áº.GßøÚUPõzx |hzxQÓÁº E[Pø Í ²® AÁº PõzxU öPõÒÁõº. CuØPõP ÷¯÷PõÁõ å®©õ ÁõP AÁº Th C ¸ UQÓõº. Cøu Â_Áõ] ² [PÒ.

...|õß Â_Áõ]zv ¸ UQÓÁº CßÚõº GßÖ AÔ÷Áß, |õß AÁ›hzvÀ J¨ ¦U öPõ k zuøu AÁº A¢|õÒ ÁøµUS® Põz xU öPõÒ Í ÁÀ»Áµõ ° ¸UQÓõöµßÖ {a\°zx ª ¸UQ÷Óß. (2 w÷©õ. 1:12) GßÖ £Äø»¨÷£õ» } [PÐ®ö\õÀ¾[PÒ. ÷¯÷PõÁõ å®©õ,PºzuºE[P÷ Íõk Th C ¸ ¢x £õxPõz x |hzxÁõº. C¢u Â_Áõ\z÷uõk C¢u öá£zøu HöÓk [PÒ.:

÷¯÷PõÁõ å®©õ ÁõQ¯ ÷uÁ÷Ú, E©US ì ÷uõzvµ®!

GßøÚ ²®, Gß Sk®£zøu ²® Cµm]U S®£i Gß÷Úõk Th C ¸ UQÓÁ÷µ ì ÷uõzvµ®!

GßøÚzu¨¦ ÂUS®£i Gß÷Úõi ¸UQÓÁ÷µ E©US ì ÷uõzvµ®!

GßøÚUPõzxU öPõÒÐ®£i ÷¯÷PõÁõ å®©õ ÁõP Th C ¸ UQÓÁ÷µ E©US ì ÷uõzvµ®!

Gß Sk®£zv¼ ¸ UQÓ JÆöÁõ ¸ Áøµ²® Cµm]zx E©US \õm]¯õP ©õØÖÃµõP!

GÚUS Á¢v ¸ UQÓ C¢u CUPmi¼ ¸ ¢x GßøÚ ²®,Gß Sk®£zøu ²® u¨¦ Â¨¥µõP!

GßøÚU Pøh]Áøµ Põz x |hzxÃµõP!

}º ÷¯÷PõÁõ å®©õ ÁõP Gß÷Úõi ¸ ¢x,Pøh] ÁøµGßøÚU Põz x |hzxÁº GßÖ Â_Áõ]UQ÷Óß!

÷¯÷PõÁõ å®©õ ÂØS ì ÷uõzvµ®!

C÷¯_Â ß |õ©zvÀ... B ö©ß! B ö©ß! (முடிந்தது)

# சகோதரிகள் பகுதி

## PRAISE THE LORD

### கர்த்தருக்கு பிரியமாய் இருப்பது எப்படி

மூன்றாவதாக பிதா கொடுத்த பாத்திரத்திலே பாணம் பண்ணும்படி இயேசு கீழ்படிந்து ஒப்பு கொடுத்து பிதாவெ உமது நாமத்தை மகிமைபடத்தும் என்றார். அப்பொழுது மகிமை படுத்தினேன், இன்னமும் மகிமை படத்தவேன். ஏன்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று (யோ 12 27-28).நாமும் நறுங்குண்டதும் நொறுங்குண்டதுமான இருதயத்தை ஒப்ப கொடுத்து கீழ்படிந்து கர்த்தரை பிரியபடுத்துவோம்.

3. ஆவியோடு ஆராதிப்பது: தேவன் ஆவியாயிருக்கிறார், அவரை தொழுது கொள்கிறவ்ாகள் ஆவியோடும், உண்மையோடும் அவரை தொழுது கொள்ள வேண்டும் என்றார் (யோவான் 4:24)

தேவனுடைய நாமத்தை பாடடினால் துதித்து, அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைபடுத்தவேன். கொம்பும் விரிகுளம்புமுள்ள காளை எருதை பார்கிலும் இதுவே கர்த்தருக்க பிரியமாய் இருக்கும். (சங் 69 :30-31)

ஆவியோடும் உண்மையோடும் கர்த்தரை பாடி , ஸ்தோத்தரித்து அவரில் மகிழ்ந்து கர்த்தருக்க பிரியமானது ஆராதனை நேரம் நாம் கர்த்தரை சந்திக்கிற நேரம் அந்த நேரம் நம்மத்தியிலே இறங்கி வருகிறார். நாவினால் மட்டும் நாம் பாடினால் போதாது உள்ளத்தினால் பாடவேண்டும். நம் ஜெபங்களும். வேண்டுதலும் கர்த்தருடைய இருதயத்தை தொடவேண்டும் அப்பொழுது கர்த்தர் நம் மேல் பிரியமாய் இருப்பார்.

4. விசாவாசமாய் இருப்பது.விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பத கூடாத காரியம் ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்று அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறார் என்றும் விசுவாசிக்க வேண்டும். (எபி 11:6). விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபி 11:1)

ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன் என்று அழைக்கப்பட்டார் ஒரு நாள் கர்த்தர் அவனைபார்த்து கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்குப் போ. ( ஆதி 12: 1) என்று சொன்ன போது எங்கே போகிறோம் என்று அறியாமல் கர்த்தர் எப்படியும் நடத்துவார் என்ற விசுவாசத்தோடு புறப்பட்டு போனார். கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்! ஏன்ற அசைக்க முடியாத விசுவாசம் அவருக்க இருந்தது .(சங் 138:8)தேவனை சார்ந்து இருப்பதுதான் விசுவாசம் தாவீது, கோலியாத்தை சந்திக்க புறப்படும் போது, பெரிய ஆயுதங்களையும் நம்பி போகவில்லை சரீரத்தைப்பாதுகாக்க மார்கவசத்தை அணிந்த கொண்டு

 செல்லவில்லை பட்டயமோ ஈட்டியோ ஒன்றும் கையில் இல்லை ஆனால் விசுவாசம் இருந்தது. கர்த்தர் எனக்காக யுத்தம் செய்வார், என்ற விசுவாசத்தோடு சிறிய கூழாங்கல்லை கொண்டு பெரிய வெற்றியை சுதந்தரித்தார்.

நாம் எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தர் பேரில் விசுவாசமாய் அவரிடம் சார்ந்து இருந்து பிதாவுக்கு பிரியமாய் இருப்போம்.

5.உத்தமகுணம்: என் தேவனே, நீர் இருதயத்தைச் சோதித்து, உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிறீர் என்பதை அறிவேன் (1 நாளா 29:17)உத்தம குணம் உள்ளவர்கள் கர்த்தருக்க பிரியமானவர்கள் ஆகவே கர்த்தர் ஆபிரகாமை அழைத்த போது நான் சர்வவல்லமையுள்ள தேவன் நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாய் இரு என்றார்(ஆதி 17:1)கர்த்தர் யோபுவை குறித்து சாட்சி கொடுக்கும் போது யோ உத்தமனும் சன்மார்கனும் தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்க விலகுகிறவனமாகிய அவனைப்பொல் பூமியில் எவறும் இல்லை என்றார். (யோபு 1:8) உத்தம குணத்திலுள்ள விஷேசம் என்னவென்றால் அவர்களுடைய வாயிலே கபடம் இருக்காது. முன்னொன்று பேசி பின்னால் ஒன்று பேச மாட்டார்கள். எல்லாவற்றிலும் உண்மையாய் இருப்பார்கள்.பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள் உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்க பிரியம் (நீதி 12:22).எல்லாவற்றிலும் உண்மையாய் இருந்து உண்மையயை பேசி கர்த்தரை பிரியபடுத்தவோம்.

6 உற்சாகமாய் கொடுப்பது.: உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். (1 கொரி 9:7)சாதாரணமாய் கொடுப்பது வேறு, தேவ அன்பினால் நிறைந்து உற்சாகமாய் கொடுப்பது வேறு, கர்த்தரை நேசிக்கிறவர்கள் கல்வாரி அன்பினால் உந்தப்பட்டு தியாகமாய் கொடுக்கிறார்கள். உள்ளத்தைப் பார்கிலும் ஆண்டவர் உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் பிரியமாய் இருக்கிறார்.இயேசு தேவ ஆலயத்திற்கு வந்த போது இரண்டு காசுகளை போட்ட ஏழை விதவையை பார்த்தார். 'அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துத் தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள்ளூ இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள்' என்றார். (லூக்கா 21:4) வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம(அப் 20:35)கர்த்ருக்கென்று உற்சாகமாய் கொடுக்கும் போது, நிச்சயமாய் கர்த்தர் நம்மை வானத்தின் பலகனிகளை திறந்து இடங்கொள்ளாமல் போகும் மட்டும் ஆசீர்வதிப்பார்.

நாமும் உற்சாகமாய் கொடுத்து கர்த்தரை பிரியபடுத்துவோம்.

பிரியமான சகோதரிகளே 'என் பிரியமே என்று நம்மை பார்த்து கர்த்தர் அழைக்கும்படி நாம் அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழ்வோம். அதற்காக ஜெபிப்போம்.

கர்த்தர் நம்மை மென்மேலும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்

கிறிஸ்துவுக்குள்

அன்பு சகோதரி .ஜோன் ஆஃப் ஆர்க் அசோக்குமார்

# கடந்த மாத நிகழ்வுகள்

கடந்த மாதம் நடைபெற்ற பரிசுத்த ஆராதனைகளாகிய குருத்தோலை ஞாயிறு பெரிய வியாழன், பெரிய வெள்ளி, மற்றும் உயிர்தெழுந்த ஞாயிறு ஆராதனை













நேரத்தில் அநேகர் தேவனை ஆராதித்து தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்று சென்றார்கள்

உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயலாளர் சகோ. ஜஸ்டின் சுந்தராஜ்

97153421- 97376456

பொருளாளர் சகோ. ஜெயசேகர்

23711698 - 66442727

பெண்கள் ஐக்கிய சங்க தலைவி

சகோதரி : அனுஷுயா டேவிட்ஸன்

23922536 - 97148472

வாலிப ஐக்கிய குழு தலைவர்

சகோ. எபிநேசர் 66857827

சபையின் அஞ்சல் விலாசம்

your Name...... Post box no 46795,
Fahaheel 64018 KUWAIT

Church ' E mail ' Address

ahmaditamil@hotmail.com

Church Website Address

www.ahmaditamilcongregation.org

தங்களது ஜெப விண்ணப்பங்கள் எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும், உங்களுக்காக ஜெபிக்க
எப்பொழுதும் ஒரு குழு ஆயத்தமாய்
இருக்கிறது

Private circulation